

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜனவரி 09, 2020 | புரட்சி 18 | முழக்கம் 52 | விலை: ரூ.3.00

## வேத காலத்தில் தொடங்கிய கொலைவெறி தொடர்கிறது

# ‘ஜெ.என்.யூ’ மீது பார்ப்பனிய முகமூடிகளின் கொடூரத் தாக்குதல்

***புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழக வளாகத்தில் முகமூடி அணிந்து, ‘இந்துத்துவ பார்ப்பனிய’ கும்பல், மாணவர்களையும் பேராசிரியர்களையும் பயங்கர ஆயுதங்களுடன் குறி வைத்து தாக்கியிருப்பது நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.***

மாணவர் தலைவர்களையும், இஸ்லாமிய மாணவர்களையும் குறி வைத்து நடத்தப்பட்ட இந்த மூர்க்கத்தனமான தாக்குதலில் 34 மாணவர்கள் படுகாயத்துடன் ‘எய்ம்ஸ்’ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு முதல் உதவி சிகிச்சை மட்டும் வழங்கப்பட்டு வெளியே அனுப்பப்பட்டுள்ளனர். விரல்கள் உடைந்து, கடுமையான தலைக் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவமனையில் அனுமதித்து உரிய சிகிச்சை செய்தால் தாக்குதல் நடத்திய கும்பலுக்கு எதிரான சாட்சியமாகிவிடும் என்று மனசாட்சியே இல்லாமல் மருத்துவமனை நிர்வாகம் அரசு அதிகார மிரட்டலுக்கு பணிந்து செயல்பட்டிருக்கிறது.

மாணவர்களைக் காப்பாற்றும் பொறுப்பிலுள்ள துணைவேந்தர் ஜெகதேஷ் குமார், மாணவர்களைக் காப்பாற்றத் தவறிய குற்றத்துக்காக பதவி விலக வேண்டும் என்று, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கம் மற்றும் ஆசிரியர் கழகங்கள் வலியுறுத்தியுள்ளன.

“வளாகத்தில் அமைதிப் பேரணி நடத்தியபோது என்னை குறி வைத்து இரும்புத் தடிகளால் சுமார் 25 முகமூடி அணிந்த கும்பல் தாக்கியது” என்று பத்திரிகையாளர்களிடம் கூறினார் மாணவர் சங்கத் தலைவர் ஆயிஷா கோஷ். கை உடைந்து கட்டுப் போட்டிருந்த நிலையில் உடலில் 15 இடங்களில் தையல் போட வேண்டிய நிலையில் அவர் இந்தப் பேட்டியை அளித்தார். ஆர்.எஸ்.எஸ். மாணவர் அமைப்பான “அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்” என்ற அமைப்பு தொடர்ந்து வளாகத்தில் வன்முறைகளை திட்டமிட்டு அரங்கேற்றி வருகிறது. இந்தக் கொடூரமான தாக்குதலை அழுத்தமாகக் கண்டித்து, ஆங்கில ‘இந்து’ நாளேடு தனது தலையங்கத்தில் (ஜன.7, 2020) “ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களின் உடன்பாடு ஆதரவு இல்லாமல், இந்தத் தாக்குதல் நடந்திருக்க முடியாது” என்று எழுதியிருக்கிறது. அதற்கான காரணங்களையும் அடுக்கிக் காட்டியிருக்கிறது, அந்தத் தலையங்கம்.

- பல்கலைக் கழக வளாகத்துக்கு வெளியே ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டிருந்த நிலையில் முகமூடி அணிந்த கும்பல் இத் தாக்குதலை நடத்தியிருக்கிறது.
- வீதியிலுள்ள விளக்குகள் தாக்குதலின்போது திட்டமிட்டு அணைக்கப்பட்டுள்ளன. தாக்குதல் நடத்திய முகமூடி கும்பலுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கியதோடு தாக்குதலை முடித்து அவர்கள் பாதுகாப்புடன் வெளியேறவும் உதவியிருக்கிறது. வெளியேறும்போது ‘வசை’ முழக்கங்களை அந்தக் கும்பல் எழுப்பியது.
- தாக்குதல் நடத்திய ஒருவரைக்கூட காவல்துறை கைது செய்யவில்லை.
- இந்தக் கொடூர ஆயுதம் தாங்கிய தாக்குதலில் பல மணி நேரம் நிலைகுலைந்து போய் மாணவர்கள், ஆசிரியர்களின் மரண சத்தம் கேட்டது.
- அறிவு ஜீவிகளைக் கண்டு இந்துத்துவா பேசுவோர் குலை நடுங்கி நிற்கிறார்கள். அதனால் தான் அத்தகைய அறிவார்ந்த சிந்தனையாளர்களை உருவாக்கும் உயர் கல்வி நிறுவனங்களை குறி வைத்து தாக்குகிறார்கள்.
- குறிப்பாக ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் மீதான தாக்குதல் 2014ஆம் ஆண்டே தொடங்கி விட்டது. காரணம், இந்தப் பல்கலைக்கழகம், பன்முகக் கலாச்சாரங்களைக் கொண்ட மாணவர்களை அனுமதிப்பதுடன் அவர்களை சிந்திக்கக் கூடிய திறனாய்வு செய்யக் கூடிய அறிவார்ந்த மாணவர்களாக உருவாக்குகிறது என்பதுதான்.
- வரலாறுகளோடு கற்பனை புராணங்களை இணைப்பது; நம்பிக்கைகளை மதவெறியாக மாற்றுவது போன்ற இந்துத்துவாவின் அரசியல் செயல் திட்டங்களுக்கு அறிவு ஜீவிகள் தடையாக இருப்பதை, இவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை
- கடுமையான காயங்களை இந்த மாணவர்களோ, ஆசிரியர்களோ தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்டது இல்லை. மாறாக, ஆர்.எஸ்.எஸ். மாணவர் அமைப்பான ‘அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்’ தான் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கிறது என்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கிறது.
- பல்கலைக்கழக நிர்வாகமும் துணைவேந்தர் ஜெகதீஷ் குமாரும் மாணவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையிலிருந்து தவறியதோடு மட்டுமின்றி, ஒரு கல்வி வளாகத்தின் பெருமையான அடையாளம் சீர்குலைவதற்கு காரணமாக இருந்திருக்கிறார்கள்.
- அமுல்யா பட்நாயக் என்பவர், டெல்லி மாநகரக் காவல்துறை ஆணையர், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டியது அவரது தலைமையிலான காவல்துறையின் கடமை. மாறாக ஜாமியா மிலியா பல்கலைக்கழக நூலகத்துக்குள் அத்துமீறி நுழைந்தது. மாணவர்களைத் தாக்கிய கும்பலைத் தடுக்காமல், தாக்குதலை வேடிக்கைப் பார்த்ததே காவல்துறையினர்தான். இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் முகமூடி அணிந்து வரவில்லை. ஆனால், தங்களுடைய பெயர் அடையாள பேட்ஜ்களை அணியாமல் மறைத்துக் கொண்டு வந்து தாக்குதல் நடத்தினர்.
- தாக்குதலைக் கண்டிக்கிறோம் என்று பா.ஜ.க. தலைவர்களும் அமைச்சர்களும் கூறுவது சடங்குத்தனமான வெற்று வார்த்தைகள்தான். இந்தக் கண்டன வார்த்தைகளுக்கு எந்த மரியாதையும் தர முடியாது.
- இந்தத் தாக்குதலை மோடியும் மத்திய அரசும் ஏற்கவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டுமானால், தாக்குதலுக்கு துணை நின்ற காவல் துறை மீதும், தாக்குதல் நடத்திய கும்பல் மீதும் உரிய பிரிவுகளில் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்து நீதிமன்றம் முன்னிறுத்த வேண்டும்.

- என்ற கருத்துகளை ‘இந்து’ தலையங்கம் பதிவு செய்திருக்கிறது.

மாணவர்களே இரு பிரிவாக தங்களுக்குள் மோதிக் கொண்டார்கள் என்று பா.ஜ.க.வினர் தாக்குதலை மலினப்படுத்துவது அப்பட்டமான பொய் என்பதற்கு சான்றாக ‘இந்து ரக்ஷாதள்’ என்ற அமைப்பு தாக்குதலுக்கு உரிமை கோரியிருக்கிறது. அதன் தலைவர் பிங்கி சவுத்ரி என்பவர், ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம் தேச விரோதிகளின் புகலிடமாகி வருவதை எங்களால் சகித்துக் கொள்ள முடியாது. எனவே எங்கள் தொண்டர்கள் தாக்குதல் நடத்தினார்கள்” என்று கூறியிருக்கிறார்.

ஏற்கனவே இந்து பார்ப்பனியத்தை எதிர்த்த பகுத்தறிவாளர்கள் தபோல்கர், கல்புர்கி, பன்சாரே, கவுரி லங்கேஷ் ஆகியோரை சுட்டுக் கொன்ற ‘சனாதன் சன்ஸ்தா’ என்ற பார்ப்பனிய அமைப்பை பா.ஜ.க. ஆட்சி தடை செய்யாததோடு, குற்றவாளிகள் மீதான வழக்கு விசாரணைகளையும் முடக்கிப் போட்டுவிட்டது. இப்போது உயர்கல்வி நிறுவனங்கள் குறி வைக்கப்படுகின்றன.

தன்னை கேள்வி கேட்டவர்களை அழிப்பதே பார்ப்பனியத்தின் ‘தர்மமாக’ - வேதகாலம் தொட்டு இருந்திருக்கிறது. வேத பார்ப்பனியத்தையும் அவர்களின் ஒழுக்கக் கேடுகள் மக்கள் விரோத செயல்பாடுகள் - யாகங்களைக் கேள்வி கேட்டவர்களை ‘அரக்கர்கள்’, ‘ராட்சதர்கள்’ என்று கூறி அழித்தார்கள். பகவான் அவதாரம் எடுத்து வந்து அழித்ததாக புராணங்களை உருவாக்கினார்கள். வேதத்தை ஏற்க மறுத்தவர்களை ‘நாத்திகர்’ என்றார்கள். வேதம் படிக்கும் ‘சூத்திரன்’ நாக்கை வெட்டு என்றார்கள். அறிவுலகத்தைக் கண்டு நடுங்கும் ஆரியம் இப்போது துப்பாக்கிகளையும் வெட்டரிவாளையும் இரும்புத் தடிகளையும் கையில் எடுக்கிறது.

சம்பூகனையும் இரணியனையும் இராவணனையும் அழித்தக் கூட்டத்தின் வாரிசுகளே இப்போது முகமூடிகளோடு பல்கலை வளாகத்துக்குள்ளும் ‘சம்ஹாரம்’ செய்ய வருகிறார்கள். ஆரிய-திராவிடப் போர் முடியவில்லை.

**‘இரா’**

## ‘பிராமணர்’ மரபணு மற்றவர்களைவிட உயர்ந்ததாம் : குஜராத் சட்டப் பேரவைத் தலைவரின் திமிர் பேச்சு

குஜராத் சட்டப் பேரவைத் தலைவரும் பா.ஜ.க. தலைவர்களில் ஒருவருமான இராஜேந்திர திரிவேதி எனும் பார்ப்பனர், ‘பிராமணர்களின் மரபணு, மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது” என்று பேசியிருக்கிறார். ஒவ்வொருவருக்கும் ஆசி வழங்கும் உரிமை ‘பிராமணருக்கு’ மட்டுமே உண்டு என்றும், அது பிராமணர்களின் பிறப்புரிமை என்றும் பேசியிருக்கிறார். குஜராத் காந்தி நகரில் ‘பிராமண வணிக சம்மேளனம்’ நடத்திய மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், இந்தியாவில் நோபல் பரிசு பெற்ற ஒன்பது பேரில் 8 பேர் ‘பிராமணர்கள்’ என்றும் பெருமையுடன் பேசினார்.

தலித் மக்களின் அடையாளமாகவும், அரசியல் சட்ட வரைவுக் குழு தலைவராகவும் இருந்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கருக்கு அத்தகைய வாய்ப்புகளை வழங்கியதே ஒரு ‘பிராமணர்’ தான். அவர்தான் அம்பேத்கருக்குப் பின்புலமாக நின்று, அவரை உயர்த்திவிட்டவர் என்றும், ‘பிராமணர்கள்’ எப்போதுமே அடுத்தவர்களை வளர்த்து விடுபவர்கள் என்றும் திரிவேதி கூறினார். பி.என். ராவ் தான் சட்டங்களை எழுதியவர் என்றும் இந்தப் பெருமை அவருக்கே உரியது என்றும் அம்பேத்கரே ஒப்புக் கொண்டதாக அவர் மேலும் பேசியிருக்கிறார்.

புரட்சியாளர் அம்பேத்கரை அரசியல் சட்ட வரைவுக் குழு தலைவராக்கியது ராவ் அல்ல; அரசியல் நிர்ணய சபை தான் அம்பேத்கரை தலைவராக தேர்வு செய்தது. ஏதோ அரசியல் வரைவுக் குழு தலைவராக அம்பேத்கரை உருவாக்கியதே பி.என். ராவ் என்பதுபோல திரிவேதி பேசியிருக்கிறார். பி.என். ராவ் அரசியல் நிர்ணய சபையின் சட்ட ஆலோசகராக செயல்பட்டவர். உலக நாடுகளின் சட்டங்களைத் தொகுத்து அரசியல் வரைவுக் குழுவுக்கு அளித்தவர். அந்த வகையில் பி.என். ராவுக்கு அம்பேத்கர் பெருந்தன்மையுடன் நன்றியைத் தெரிவித்தார் என்பதே வரலாறு.

அண்மைக்காலமாக பார்ப்பனர்கள் வெளிப்படையாகவே தங்கள் இனப் பெருமையை பேசி வருகிறார்கள். கேரளாவில் நடந்த பார்ப்பன மாநாட்டில் இரண்டு உயர்நீதிமன்ற நீதிபதிகள் பங்கேற்றுப் பேசினர். ஒரு நீதிபதி ‘அக்கிரகாரங்கள்’ என்ற பார்ப்பன குடியிருப்பில் மற்றவர்கள் வாழக் கூடாது; அக்கிரகாரங்கள் புனிதமானவை என்று பேசினார்.

அதேபோல, மகாராஷ்டிராவில் பா.ஜ.க. முதலமைச்சராக இருந்த தேவேந்திர பட்னாவிஸ், “நான் ஒரு பிராமணன் தான்.” அதற்கு என்ன இப்போது? என்று தன்னை கட்சிக்குள் எதிர்த்து வரும் பிற்படுத்தப்பட்ட பா.ஜ.க., எம்.பி.களுக்கு பதில் தரும் வகையில் திமிரோடு பேசியிருக்கிறார்.

## பா.ஜ.க. நடத்துவது ஆர்.எஸ்.எஸ். ஆட்சியைத் தான்

இந்துக்களுக்கான நாடு ஒற்றை நாடாக இருக்க வேண்டும்; மாநிலங்களாக பிரியக் கூடாது என்பதே “சங்கி”களின் கொள்கை. இந்த உண்மைகளை எல்லாம் வெளியே பேசாமல் மூடி மறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மோடி ஆட்சி இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் ‘மாநிலங்களின்’ உரிமைகளை படிப்படியாக பறித்துக் கொண்டு வருகிறது. ஒரே மொழி, ஒரே கல்வி, ஒரே வரி விதிப்பு, ஒரே ரேஷன் கார்டு என்ற மாநில அதிகாரங்களைப் பறிக்கும் நடவடிக்கைகளுக்குப் பின்னால் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனிய கொள்கை இருக்கிறது.

- மாநிலங்களின் மொழி வழிப் பிரிவினையை ஆதரித்து காங்கிரஸ் தீர்மானம் போட்டபோது பா.ஜ.க.வின் மூதாதையரான இந்து மகாசபை மாநிலங்கள் பிரிவினையை கடுமையாகக் கண்டித்து தீர்மானம் போட்டது.

- “இதனால் மாநிலங்களுக்கு மிக அதிகமான அதிகாரங்கள் கிடைத்து விடுகிறது. கூட்டாட்சி முறை வந்து விட்டால் ஏராளமான அரசியல் கட்சிகள் வந்துவிடும். அதனால் தகராறுகள் ஏற்படும். ஒவ்வொரு பகுதியும் தனித்தனியாக ஆகி விடும். அதனால் இந்தப் பழமை வாய்ந்த பாரத பூமி (பாரத் வர்ஷா) சிறிது சிறிதாகப் பிளவுபட்டு விடும். அதன் பிறகு இந்தியா உலகின் முன் மிகப் பெரிய சக்தியாக வளர முடியாது.” (ஆதாரம் : இந்து மகா சபை வெளியீடான ‘Truth which is unity’)

- 1956ஆம் ஆண்டு மாநிலங்கள் புனரமைப்பு ஆணையம் மொழி வழி மாநிலப் பிரிவினையை பரிந்துரைத்த போது ஆர்.எஸ்.எஸ். ‘தத்துவத் தந்தை’ கோல்வாக்கர் கடுமையாக எதிர்த்தார். மாநிலப் பிரிவினைகள் இல்லாத ஒரே அரசாங்கமே இருக்க வேண்டும். அதுவே இப்போது அவசியம் என்றார் (“A unitary Goverment, Prime need of the hour). (ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா 26.1.1956)

- ஆர்.எஸ்.எஸ். அரசியல் வடிவமான ‘பாரதிய ஜன சங்கம்’ என்ன கூறியது?

“பாரதிய ஜனசங்கம் ஆட்சிக்கு வந்தால், அரசியல் சட்டத்தைத் திருத்தி கூட்டாட்சி முறையை ஒழித்து இந்தியாவை ஒரே நாடு என பிரகடனப்படுத்துவோம்.” (1957 பாரதிய ஜனசங்க தேர்தல் அறிக்கை) பாரதிய ஜன சங்கம் போட்டுத் தந்த பாதையில் தான் பாரதிய ஜனதா மாநில அடையாளங்களை படிப்படியாக அழித்து ஒற்றை ‘இந்து தேசத்தை’ உருவாக்கும் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறது.

# சீனாவும் ஈரானும் ‘இந்து தேசம்’ என்று உரிமை கோருகிறது ஆர்.எஸ்.எஸ்.

இந்து புராணங்களை வரலாறுகள் என்று ‘சங்கி’கள் பேசி வருவதை வரலாற்று அறிஞர்கள் நகைக்கிறார்கள். சுப்ரமணிய சாமி பார்ப்பனர் இப்போது இராமன் கோயில் பிரச்சினையை முன் வைத்து எழுதியுள்ள நூலில் இந்தியாவின் வரலாற்றை புராணங்களின் அடிப்படையில் எழுத வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். சுப்ரமணியசாமி எழுதியுள்ள இந்த ‘மடத்தனமான’ கருத்துகளை அவரது மூளையில் ஏற்றி வைத்தது, கோல்வாக்கரின் சிந்தனைதான்.

பாகிஸ்தான், பர்மா, ஆப்கானிஸ்தான், ஈரான், சீனாவும் இந்துக்களுக்கான நாடு என்று எழுதியதோடு அதற்கு சான்றாக புராணங்களையே வரலாறுகளாக்குகிறார், கோல்வாக்கர். அதையே சு. சாமியும் இப்போது பேசுகிறார்.

கோல்வாக்கர் எழுதுகிறார்:

“நமது தாய்நாடு எவ்வளவு தூரம் பரந்து, விரிந்து கிடக்கிறது என்பதைத்தான் நமது **புராணங்களும் இதிகாசங்களும்** சுட்டிக் காட்டுகின்றன.

இன்றைய ஆப்கானிஸ்தான், நமது பழைய உபகானஸ்தான்; மகாபாரதத்தில் வரும் சால்யா, ஆப்கானிஸ்தானத்திலிருந்து வந்தவரே. நவீன காபூலும், காந்தாரமும் அன்றைக்கு ‘காந்தார தேசமாக’ இருந்ததுதான். அந்த நாட்டை (ஆப்கானிஸ்தான்)ச் சார்ந்தவர் தான், கவுரவர்களின் தாயாகிய காந்தாரி. ஈரான் கூட ஆரிய தேசமே. அதன் முந்தைய அரசன் ரேஷாஷா பெலாவி முஸ்லீமாய் இருந்தார் என்பதைவிட ஆரியராக இருந்தார் என்பதுதான் உண்மை.... கிழக்குப் பகுதியைப் பார்த்தால், பர்மா என்பது நமது பழைய பிரதேசமே... தெற்கே திரும்பினால், இலங்கை மிக நெருங்கிய தொடர்புடையது. இந்தியா என்ற பெரும் நிலப் பரப்பிலிருந்து எப்போதுமே வேறுபடுத்திப் பார்க்கப்படாதது திபெத். நமது ‘திரி வாஸ்தவம்’ தான் நமது தலைவர்களால் சீனப் பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது. அது பரமேஸ்வரின் கைலாயம்; கடவுளின் பூமி.” (ஆதாரம்: Bunch of thoughts என்ற கோல்வாக்கரின் தமிழ்மொழி பெயர்ப்பு நூலான ‘சிந்தனைக் கொத்து’ நூல்)

தனித் தனி நாடுகள் உருவாகிய பிறகும் எவ்வித வரலாற்று சான்றுகளும் இன்றி புராணங்களில் வரும் பெயர்களை எடுத்துக் கொண்டு வேறு நாடுகளுடன் வெவ்வேறு மொழிகளில் ஒலிக்கும் பெயர்களை மட்டுமே தொடர்புபடுத்தி, அதையே வரலாறு என்கிறார் கோல்வாக்கர்

நாடுகளுக்கான எல்லைகளை நாம் ஏற்க முடியாது என்று கூறும் கோல்வாக்கர், அது மனசாட்சிக்கு செய்யும் துரோகம்; வெட்கக் கேடு என்று எழுதுகிறார்.

“இன்றைய அரசியல் எல்லைகள்தான் நமது முழுமையான தாயகத்தினைக் குறிக்கிறது என நாம் நினைப்போமானால், நமது மனசாட்சிக்கு துரோகம் செய்தவர்கள் ஆவோம். இப்படி ஒப்புக் கொண்டால் நமது அறிவுக்கு இதைவிட வெட்கக்கேடு ஏதுமில்லை.” (ஆதாரம்: மேற் குறிப்பிட்ட அதே ‘சிந்தனைக் கொத்து’ நூல்)

கோல்வாக்கரின் வரையறையில் சீனாவும் ஈரானும் இந்து நாடுகள்; அந்த நாடுகளின்மீது படையெடுத்து, இந்தியாவுடன் இணைக்க வேண்டும் போலிருக்கிறது. அதற்கு ஆதாரம் புராணங்கள்.

புராணங்களை வரலாறுகளாக்கும் ஒரு கூட்டம் இந்த நூற்றாண்டிலும் வெட்கமின்றி எழுதுகிறது; பேசுகிறது.

# ‘தேச பக்தன்’ பார்ப்பன எச். ராஜாக்களுக்கு சில கேள்விகள்

பா.ஜ.க.வை எதிர்த்தால் - பார்ப்பனர்களை விமர்சித்தால் - எச். ராஜா போன்ற பார்ப்பனர்கள் ‘இந்திய எதிர்ப்பாளர்’ (anti-Indian) என்று வசைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். திமிரும், பார்ப்பன ஆணவமும் கொழுத்து திரிகிறது இந்தக் கூட்டம். அதிகார மமதையில் ஊறி நிற்கும் ‘சங்கி’ பார்ப்பனர்கள், ‘இந்தியா’ என்பதையே ஏற்றுக் கொள்ளாத ‘தேச பக்த’ கும்பல், பா.ஜ.க.விலிருந்து சங்பரிவார் துணை அமைப்புகள் வரை ‘இந்தியா’ என்பதை ஏற்பதே இல்லை. ‘பாரதிய’ என்ற சொல்லை மட்டுமே பயன்படுத்துவார்கள். ‘அவாள்’ கண்ணோட்டத்தில் ‘இந்தியா’ என்பது ‘தீட்டு’. இந்த கும்பல் இப்போதும் தத்துவத் தந்தையாக ஏற்றுக் கொண்டிருக்கும் கோல்வாக்கர் இந்தியா என்ற சொல்லையே பயன்படுத்தக் கூடாது என்று எழுதி வைத்திருக்கிறார். அந்த அடிப்படையிலேயே ‘இந்தியா’ என்ற சொற்றொடரும் அரசியல் சட்டமும் அவர்களுக்கு கசக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். கொள்கைப் பிரகடனத்திலும் ‘இந்தியா’ என்ற சொல்லை இவர்கள் பயன்படுத்துவது கிடையாது. ஆர்.எஸ்.எஸ். கொள்கை அறிக்கை என்ன கூறுகிறது?

“இந்து சமூகத்திலுள்ள பல்வேறு கூட்டத்தாரையும் ஒன்றுபடுத்துவது, ‘தர்மம்’, ‘சான்ஸ்கிருதி’ என்ற அடிப்படையில் இந்து சமூகத்துக்கு புத்துயிர் ஊட்டி புணருத்தாரணம் செய்வது, ‘பாரத் வர்ஷத்’தின் பன்முக வளர்ச்சியை சாதிப்பது என்பதே ‘சங்’கத்தின் நோக்கங்களும், இலட்சியங்களும் ஆகும்”.

- இந்த கொள்கை அறிக்கையில் ‘இந்தியா’ என்ற சொல்லே இடம் பெறவில்லை. இந்து சமூகம் என்றே குறிப்பிடுகிறார்கள்.

இவர்களுக்கு கொள்கை வகுத்துத் தந்த கோல்வாக்கருக்கு ‘இந்தியா’ பற்றிய கருத்து என்ன?

“பாரதியா என்பது நம்முடைய பழமையான பெயர். நமக்கு நினைவு தெரியாத காலம் முதல் இந்தப் பெயர் இருந்திருக்கிறது. வேதத்தில்கூட இந்தப் பெயர் இடம் பெற்றுள்ளது. நமது புராணங்கள்கூட, நமது தாய்நாட்டை ‘பாரத்’ என்றும் நமது மக்களை ‘பாரதியர்கள்’ என்றும் குறிப்பிட்டுள்ளது. உண்மையில் ‘பாரத்’ என்பது ‘இந்து’ என்பதுதான்.

இன்று பாரதியம், பாரத் என்ற சொற்கள்கூட தவறான பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியா – இந்தியர் என்ற சொல்லுக்கு மாற்றாக அதைப் பயன்படுத்துகிறார்கள். ‘இந்தியன்’ என்ற சொல் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி போன்ற பல்வேறு சமூகத்தவரையும் சேர்த்துத்தான் குறிக்கிறது. நம்முடைய சமூகமான ‘இந்து’வை மட்டும் குறிப்பதில்லை. ‘பாரதிய’ என்ற சொல்லை மற்ற சமூகத்தினரையும் இணைத்துக் கொள்ளும் சொல்லாக குறிப்பிடுகிறார்கள். எனவே தான், இந்து என்ற குழப்பமில்லாத சரியான சொல்லையே இப்போது நாம் பயன்படுத்துகிறோம். (ஆதாரம் : கோல்வாக்கர்-ஆர்.எஸ்.எஸ். அதிகார பூர்வ ஏடான ‘ஆர்கனைசர்’ ஏடு 1.12.1449)

இந்திய தேசியக் கொடியைக் கூட சில ஆண்டுகளுக்கு முன்பு தான் ஆர்.எஸ்.எஸ். ஏற்றுக் கொண்டது. தேசியக் கொடி உருவாக்கப்பட்ட போதே கோல்வாக்கர் அதை எதிர்த்தார். நமக்கானது காவி கொடி என்று கூறினார்.

‘இந்தியா’ என்பது இந்து தேசத்துக்கு எதிரானது என்பதை தங்களது கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கும் ‘வந்தேறி’ கூட்டம் தான் நாட்டின் மண்ணின் மைந்தர்களை ‘தேச விரோதிகள்’ என்று பேசித் திரிகிறது.

இந்த வரலாறுகளை வீதி தோறும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

**– ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையிலிருந்து**

## மக்கள் தொகை பதிவேடு – குடிமக்கள் பதிவேட்டுக்கான தொடக்கப் பணியே

# பா.ஜ.க. வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு

***குடியுரிமை சட்ட திருத்தம் (CAA)/தேசிய மக்கள்தொகை பதிவேடு (NPR)/ தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) ஆகிய மும்முனை தாக்குதலுக்கு எதிராக இயக்கங்கள் தொடர்கின்றன. எனினும் மோடி அரசாங்கம் தனது நிலையை மறுபரிசீலனை செய்ய மறுப்பது மட்டுமல்ல; தினமும் புதிய பொய்களை அள்ளி வீசுவதன் மூலம் போராடுபவர்களை தனிமைப்படுத்த எத்தனிக்கிறது.***

CAA காரணமாக முஸ்லீம்கள் உட்பட எந்த ஒரு இந்திய குடிமகனின் உரிமையும் பறிபோகாது என மோடி அர சாங்கம் கூறுகிறது. CAA என்பது தனியாக செயல்படப் போவது இல்லை. NPR மற்றும் NRC உடன் இணைந்து தான் CAA பயணிக்க ஆட்சியாளர்கள் திட்டமிடுகின்றனர்.

NRCயை தேசம் முழுதும் அமலாக்கும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என மத்திய அமைச்சர்கள் கூறுகின்றனர். "தற்போதைக்கு" என்பதன் பொருள், பின்னால் இது வரும் என்பதுதானே! NPR மற்றும் NRCக்கு இடையே எவ்விதத் தொடர்பும் இல்லை என அடித்து சத்தியம் செய்கின்றனர். எனினும் NPRதான் NRCக்கு தொடக்கம் என்பதை 2003இல் வாஜ்பாய் அரசாங்கம் குடி உரிமை சட்டத்தில் செய்த திருத்தம் தெளிவாக கூறுகிறது. மேலும் சென்சஸ் அமைப்பின் வலைதளத்திலும் இது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மோடி அரசாங்கத்தின் மும்முனை தாக்குதலின் தொடக்கம் தேசிய மக்கள் தொகை பதிவேடு எனப்படும் NPRதான்! போராட்டங்கள் நடக்கும் பொழுதே NPRக்கான பணிகளுக்காக மோடி அரசாங்கம் சுமார் ரூ4000 கோடியை ஒதுக்கியுள்ளது. 2010 மற்றும் 2015ம் ஆண்டுகளில் தேசிய மக்கள்தொகை பதிவேடுக்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டன. ஆனால் தற்போது கீழ்கண்ட கேள்விகள் புதியதாக இணைக்கப்பட்டுள்ளன:

உங்களது தாய்/தந்தை எப்பொழுது பிறந்தனர்?

எங்கே பிறந்தனர்?

எந்தெந்த இடங்களில் வசித்தனர்?

இவற்றுக்கு ஆதாரங்கள் என்ன?

இந்த கேள்விகள்தான் ஆபத்துகளுக்கு தொடக்கப் புள்ளியாக அமைகின்றன.

NPR-NRC எப்படி உருவாக்கப்படும்?

ஒரு சிறு நகரத்தில் அனைத்து மதம் மற்றும் சாதியினர் சுமார் 25,000 குடும்பங்களை சேர்ந்த 1,00,000 பேர் வசிப்பதாக வைத்து கொள்வோம். மக்கள் தொகை பதிவேடு ஊழியர்கள் 25,000 வீடுகளுக்கும் வந்து தகவல்கள் சேகரிப்பர். ஆவணங்களை பார்வையிடுவர். இந்த விவரங்களை மக்கள் தொகை பதிவேடு அதிகாரியிடம் சமர்ப்பிப்பர். இதன் அடிப்படையில் தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) உருவாக்கப்படும். இந்த கட்டம் வரையில் எவருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. அடுத்த கட்டமாக மக்கள் தொகை பதிவேடு அதிகாரி இந்த விவரங்களை சரி பார்ப்பார். அப்பொழுது 85% அதாவது 85,000 பேரின் விவரங்கள் திருப்தியாக உள்ளது என மதிப்பீடு செய்யும் அதிகாரி அவர்களின் பெயர்களை தேசிய குடிமக்கள் பதிவேட்டில் (NRC) பதிவு செய்கிறார். அதே சமயத்தில் சுமார் 15% அதாவது 15,000 பேரின் விவரங்கள் குறித்து அவருக்கு சந்தேகம் எழுகிறது. எனவே அவர்களின் பெயர்கள் தேசிய குடிமக்கள் பதிவேட்டில் பதிவேற்றப்படாது. நினைவில் கொள்ளுங்கள்! இந்த **தனிப்பட்ட அதிகாரி எனும் ஒற்றை நபர்தான் அதிகாரம் படைத்தவர்.** விவரங்களை சரிபார்க்க அனைத்து கட்சி அல்லது குடிமக்களின் எவ்வித கூட்டு அமைப்பும் உருவாக்கப்படாது; மாறாக ஒரு தனி நபர்தான் தீர்மானிக்கிறார். இவரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு உட்பட இதில் பிரதிபலிக்கும் ஆபத்து உள்ளது. அடுத்து 15,000 பேருக்கும் நோட்டீஸ் அனுப்பப்படும். அதே போல ஒருவரின் விவரங்கள் குறித்து வேறு எவர் ஒருவரும் ஆட்சேபணையை எழுப்ப முடியும். உதாரணத்திற்கு உங்களை பிடிக்காத அண்டை வீட்டுக்காரர் உங்களை பற்றி ஆட்சேபணை எழுப்பினால் மக்கள் தொகை பதிவேடு அதிகாரி உங்களுக்கும் நோட்டீஸ் அனுப்புவார். இவ்வாறு நோட்டீஸ் பெற்றவர்கள், தாங்கள் குடிமக்கள்தான் என நிரூபிக்க வேண்டும். தற்சமயம் இருக்கும் நடைமுறை என்பது ஒருவர் குடியுரிமை பெற்றவர் இல்லை என்பதை அரசாங்கம்தான் நிரூபிக்க வேண்டும். ஆனால் புதிய நடைமுறையில் குடியுரிமை பெற்றுள்ளேன் என்பதை தனிநபர்தான் நிரூபிக்க வேண்டும். குடியுரிமையை நிரூபிக்கும் சுமை அரசாங்கத்திடமிருந்து தனி நபருக்கு மாற்றப்படுகிறது. சந்தேக வளையத்திற்குள் சிக்கிக் கொண்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்படும். அவர்கள் அந்த அதிகாரியின் அலுவலகத்துக்கு வரவேண்டும். அப்பொழுது அந்த அதிகாரி கேட்கும் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். உங்களின் ஆதார் எண் / ஓட்டுநர் உரிமம்/ வருமான வரி அட்டை / வாக்காளர் அடையாள அட்டை /பாஸ்போர்ட் போன்றவற்றை சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் அவை மட்டும் போதாது. உங்களின் பெற்றோர்கள் பிறந்த இடம்/ வாழ்ந்த இடம்/பிறந்த தேதி ஆகியவையும் அதற்கான ஆதாரங்களையும் தர வேண்டும்.

இந்த தருணத்தில் குடியுரிமை பெற தகுதி படைத்தவர்கள் யார் என்பதை கவனிக்க வேண்டும்.

2003ஆம் ஆண்டு வாஜ்பாய் அரசாங்கம் கொண்டு வந்த திருத்தத்தின் அடிப்படையில் இந்தியாவில் பிறந்த கீழ்கண்ட பிரிவினர் குடியுரிமை பெற தகுதிபடைத்தவர்கள்: 26.01.1950 அன்று அல்லது அதற்கு பின்பு, ஆனால் 01.07.1987க்கு முன்பு இந்தியாவில் பிறந்தவர்கள். 01.07.1987 அன்று அல்லது அதற்கு பின்பு ஆனால் 2003ஆம் ஆண்டு திருத்தம் அமலாக்கத்திற்கு முன்பு இந்தியாவில் பிறந்திருக்க வேண்டும்; மேலும் பெற்றோர் இருவரில் யாராவது ஒருவர் தனது பிறப்பின் பொழுது இந்திய குடியுரிமை பெற்றிருக்க வேண்டும்.

2003ம் ஆண்டு திருத்தம் அமலாக்கத்திற்கு பிறகு இந்தியாவில் பிறந்திருக்க வேண்டும்; மேலும் பெற்றோர் இருவரும் இந்திய குடிமக்களாக இருக்க வேண்டும்; அல்லது ஒருவர் குடியுரிமை பெற்றவராக இருக்க வேண்டும். இன்னொருவர் சட்டவிரோத புலம் பெயர்ந்தவராக இருக்க கூடாது. (வெளிநாட்டில் பிறந்தவர்களுக்கு தனியாக சட்டவிதிகள் உள்ளன)

இந்த சட்டவிதிகளின்படி குடியுரிமையை நிரூபிக்க பிறப்பு சான்றிதழ் முக்கிய ஆவணமாக முன்வருகிறது. ஆனால் முதல் பிரிவினருக்கு பெரும்பாலும் பிறப்பு சான்றிதழ் இருக்க வாய்ப்பு இல்லை. இரண்டாவது பிரிவினருக்கு பிறப்பு சான்றிதழ் இருக்கும். ஆனால் அவர்களின் பெற்றோருக்கு இருக்க வாய்ப்பு இல்லை. மூன்றாவது பிரிவினர் மற்றும் அவரது பெற்றோருக்கு பிறப்பு சான்றிதழ் இருக்க வாய்ப்பு உள்ளது. எனவே முதல் பிரிவினர் அனைவரும் இரண்டாவது பிரிவினரில் பெரும்பாலோரும் தமது அல்லது தமது பெற்றோரின் பிறப்பு சான்றிதழ்களை தேடி அலைய வேண்டிய சூழல் உருவாகும்.

> **ஆவணங்களை பெறுவதில் அல்லது பராமரிப்பதில் பொருளாதார நிலைமை / சாதிய நிலைமை / கல்வி ஆகியவை முக்கிய காரணிகளாக உள்ளன என்பதையே இந்த விவரங்கள் தெளிவாக்குகின்றன. ஏழை அல்லது சமூகத்தில் அடித்தட்டில் உள்ள அனைத்து மதங்களை சேர்ந்த குடும்பத்தினரும் அவர்தம் குழந்தைகளும் தேசிய குடிமக்கள் பதிவேடில் இடம் பெறாமல் போவதற்கான ஆபத்துகள் அதிகம் உள்ளன என்பதை எவரும் மறுக்க இயலாது.**

2000ம் ஆண்டு வரைகூட சுமார் 57% பிறந்த குழந்தைகளுக்குதான் பிறப்பு சான்றிதழ்கள் உள்ளன. இது 2017ஆம் ஆண்டு 85%க்கு உயர்ந்துள்ளது. எனினும் இன்னும் 15% குழந்தைகள் சான்றிதழ்கள் இல்லாமல் உள்ளனர். ஓரளவு வசதி படைத்த வீடுகளில் 9% குழந்தைகளுக்கு தான் பிறப்பு சான்றிதழ் இல்லை. ஆனால் ஏழை வீடுகளில் 23% குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ் இல்லை . பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் 28%, தலித் பிரிவில் 39%, பழங்குடி பிரிவில் 44% குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ் இல்லை. 12 ஆண்டு கல்வி கற்ற தாய்மார்களின் 78% குழந்தைகளுக்கு சான்றிதழ் உள்ளது. ஆனால் கல்வி கற்கவாய்ப்பில்லாத தாய்மார்களின் 42% குழந்தைகளுக்குதான் பிறப்பு சான்றிதழ் உள்ளது. (ஆதாரம் : இண்டியா ஸ்பெண்ட் இதழ்)

ஆவணங்களை பெறுவதில் அல்லது பராமரிப்பதில் பொருளாதார நிலைமை / சாதிய நிலைமை / கல்வி ஆகியவை முக்கிய காரணிகளாக உள்ளன என்பதையே இந்த விவரங்கள் தெளிவாக்குகின்றன. ஏழை அல்லது சமூகத்தில் அடித்தட்டில் உள்ள அனைத்து மதங்களை சேர்ந்த குடும்பத்தினரும் அவர்தம் குழந்தைகளும் தேசிய குடிமக்கள் பதிவேடில் இடம் பெறாமல் போவதற்கான ஆபத்துகள் அதிகம் உள்ளன என்பதை எவரும் மறுக்க இயலாது.

### முறைசாரா/இடம் பெயரும் உழைப்பாளிகள் எங்கே செல்வர்?

பிறப்பு சான்றிதழ் தர இயலாதவர்கள் மாற்று ஆவணங்கள் தர வேண்டும். அந்த மாற்று ஆவணங்கள் என்ன? நிலம்/சொத்துக்கள் வாங்கியதற்கான ஆவணங்கள் அல்லது எல்ஐசி காப்பீடு போன்ற சில ஆதாரங்கள் தரப்பட வேண்டும். இங்குதான் சுமார் 40 கோடி எண்ணிக்கையில் உள்ள முறைசாரா உழைப்பாளிகளாக உள்ள ஏழைகள் அல்லது வாழ்வாதாரத்திற்காக இடம் பெயர்ந்தவர்கள் பாதிக்கப்படுவர். தினமும் உண்பதற்கே கூலி வேலை செய்யும் உழைப்பாளிகள் எப்படி இடம் அல்லது காப்பீடு வாங்க இயலும்? அதற்கான ஆவணங்கள் அவர்களிடம் எப்படி இருக்க முடியும்? ஒருவர் இராமநாதபுரத்திலிருந்து சென்னை அல்லது கோவைக்கு வாழ்வாதாரத்திற்காக இடம் பெயர்ந்தவர் எனில் அவருக்கு ஆவணங்கள் எப்படி இருக்கும்? அவரது தந்தை அல்லது தாத்தாவின் ஆவணங்களுக்கு எங்கே போவார்? தனது வாழ்வாதாரப் பணியை விட்டுவிட்டு இராமநாதபுரம் போய் தேடுவாரா? அப்படியே போனாலும் ஆவணங்கள் கிடைக்குமா? இப்படி பல கேள்விகள் எழுகின்றன. எனவே, முஸ்லீம் அல்லாதவர்களும் இத்தகைய பிரச்சனைகளை சந்திப்பர். மக்கள் தொகை பதிவேடு அதிகாரிக்கு குறிப்பிட்ட மதம் அல்லது சாதியை சார்ந்தவர்களை பிடிக்கவில்லை எனில், அவர்களை "சந்தேகம்" எனும் வளையத்திற்குள் கொண்டு வந்துவிட முடியும். அதற்கு பின்னர் இத்தகைய மக்கள் ஆவணங்களை தேடி அலைய வேண்டி வரும். இது கற்பனை அல்ல; இதுதான் அசாமில் நடந்தது. தமது பெயர்களை பதிவேட்டில் இணைக்க மக்கள் லஞ்சம் உட்பட பல செலவுகளை செய்தனர். ஒரு சிலர் தமது வாகனங்கள் அல்லது இடத்தை விற்று பல்லாயிரம் ரூபாய்களை அதிகாரிகளுக்கு செலவு செய்தனர் என சமூக செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

### பாதிக்கப்படும் இந்துக்கள்

இவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் முஸ்லீம்களாக மட்டுமே இருக்க வேண்டியதில்லை. இந்துக்களும் கிறித்துவர்களும் பாதிக்கப்படலாம். இதிலிருந்து, குடியுரிமை சட்ட திருத்தத்தின்படி விலக்கு பெற வேண்டு மெனில் முஸ்லீம் அல்லாதவர்கள் தாங்கள் ஆப்கானிஸ்தான், வங்கதேசம் அல்லது பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள் என நிரூபிக்க வேண்டும். ஆனால் அது சாத்தியமில்லை. ஏனெனில் தேசிய மக்கள்தொகை பதிவேடு விவரங்களின் பொழுது எந்த ஊரை சேர்ந்தவர் என்பதை நீங்கள் சொல்லியிருப்பீர்கள். இப்பொழுது அதனை மாற்றி பாகிஸ்தான் அல்லது வங்கதேசம் என கூற இயலாது. எனவே தற்போதைய குடியுரிமை சட்டத்திருத்தம் கூட இவர்களுக்கு உதவாது. இந்துக்களில் சுமார் 40% பேர் பாதிக்கப்படுவர் என்கிறார் அம்பேத்காரின் பேரனும் மகாராஷ்டிரா தலித் இயக்கத்தின் தலைவருமான பிரகாஷ் அம்பேத்கர். பிரிட்டஷார் "ஆதிவாசி குற்ற பரம்பரை" சட்டத்தை 1871ஆம் ஆண்டு கொண்டு வந்தனர். இச்சட்டத்தின் கீழ் ஏராளமான ஆதிவாசி மக்கள் "திறந்த வெளிச் சிறைச் சாலைகளில்" (Detention Centers)வைக்கப்பட்டனர். 1952ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு அரசாங்கம்தான் இந்த சட்டத்தை அகற்றி இவர்களை விடுதலை செய்தது. சுமார் 80 ஆண்டுகள் இலட்சக்கணக்கான ஆதிவாசி மக்கள் இந்த சிறைகளில் இருந்தனர். பலர் அங்கேயே பிறந்தனர்/இறந்தனர். இவர்களில் எவருக்கும் எந்த ஆவணமும் கிடையாது. ஆவணங்கள் இல்லாத இத்தகையவர்கள் மகாராஷ்டிராவில் மட்டும் சுமார் 1.80 கோடி பேர் உள்ளனர். இப்படி ஆதிவாசி மக்கள்/ தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களில் ஒரு பிரிவினர் என 40% பேர் இந்த சட்டத்தால் பாதிக்கப்படுவர் என்கிறார் பிரகாஷ் அம்பேத்கர். மத்தியப் பிரதேசத்தில் நாடோடி சமூகத்தை சார்ந்த 51 பிரிவினர் உள்ளனர். இவர்களின் மக்கள் தொகை 60 இலட்சம். நாடோடி மக்களின் விவரங்களை சேகரிக்கும் ரேன்கா எனும் குழு இவர்களின் எண்ணிக்கை இந்தியா முழுதும் 11 கோடி என கணக்கீடு செய்துள்ளது. இவர்கள் எந்த ஒரு இடத்திலும் நிரந்தரமாக தங்குவது இல்லை. இவர்களிடம் குடியுரிமைக்காக எந்த ஆவணமும் இல்லை. இவர்கள் எங்கே போவார்கள்? இந்தியாவில் ஆதார் எண் இல்லாதவர்கள் 11% அதாவது சுமார் 14 கோடிப் பேர் உள்ளனர். ஆதார் எண் பெற தேவையான ஆவணங்களை இவர்களால் தர இயலவில்லை. அப்படியாயின் குடியுரிமைக்கான ஆவணங்களை இவர்கள் எப்படி தர இயலும்? ஆகவே CAA-NPR-NRC எனும் திரிசூலம் முஸ்லீம்களை மட்டுமல்ல; இந்துக்கள் உட்பட அனைவரையும் பாதிக்கும். எனவே இவற்றை முறியடிப்பது மிக மிக அவசியமாகிறது.

**நன்றி : 'தீக்கதிர்'**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகத் தோழர்களே!

கழக ஏடுகளான 'புரட்சிப் பெரியார் முழக்கம்', 'நிமிர்வோம்' மாத இதழ்களுக்கு உறுப்பினர் சேர்க்கையைத் தொடங்கி விட்டீர்களா?

கழகத்தின் களப் பணிகளை ஆதரவாளர்களிடம் கொண்டு சேர்க்கும் ஏடு 'புரட்சிப் பெரியார் முழக்கம்', வாரம் தோறும் நடக்கும் நிகழ்வுகளை பெரியாரியல் பார்வையில் பதிவு செய்து வருகிறது.

பெரியாரியல் குறித்த ஆழமான கட்டுரைகள், சமூகம், சுற்றுச் சூழல், கலை, இலக்கியம் குறித்த விரிவான கட்டுரைகளுடன் வெளி வருகிறது 'நிமிர்வோம்'.

தேர்தல் அரசியலில் பங்கெடுக்காத ஒரு சமுதாய இயக்கம், 2002ஆம் ஆண்டிலிருந்து 17 ஆண்டுகளாக வாரந்தோறும் பெரியார் முழக்கத்தையும், மூன்று ஆண்டுகளாக மாதந்தோறும் 'நிமிர்வோம்' இதழையும் இடைநிறுத்தமின்றி நடத்தி வருகிறது. அரசியல் கட்சிகளால்கூட ஏடு நடத்த முடியாத நிலையில் திராவிடர் விடுதலைக் கழகம் இந்தப் பணியை தொய்வின்றி செயல்படுத்தி வருகிறது.

தோழர்கள் இது குறித்த கவலை புரிதலுடன் களமிறங்கினால் ஏடுகளின் எண்ணிக்கையை மேலும் உயர்த்த முடியும் என்று உறுதியாக நம்புகிறோம்.

தோழர்களே! விரைந்து கழக ஏடுகள் தொடர்ந்து வெளிவர சந்தா சேர்ப்பு இயக்கத்தைத் துரிதப்படுத்துங்கள்!

# குடியாத்தத்தில் ஆய்வரங்கம்



NRC - CAA பற்றிய ஆய்வரங்க நிகழ்வு 31.12.2019 அன்று மாலை 6 மணிக்கு குடியாத்தத்தில் நடைபெற்றது. இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி BJP, RSS மற்றும் இந்துத்துவ அமைப்புகளின் வன்முறையாட்டங்களையும், அவர்களின் சதித் திட்டங்களையும் CAA, NRC சட்டத்தின் அபாயத்தையும் ஆதாரபூர்வமாக விளக்கி நீண்ட உரையாற்றினார். இந்நிகழ்வில் விசிக வேலூர் பாராளுமன்ற செயலாளர் சிவ. செல்லபாண்டியன், த.ஒ.வி.இ. துணைச் செயலாளர் செவ்வேள், திக மண்டல செயலாளர் சடகோபன் ஆகியோர் உரையாற்றினர். பல்வேறு தோழமை அமைப்புகளின் தோழர்கள், பொது மக்கள், பெண்கள் என அரங்கம் நிறைந்த நிகழ்வாக இருந்தது. நிகழ்வு தொடங்குவதற்கு முன்பாக புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு கழகத் தலைவர் மாலை அணிவித்தார். முழக்கம் எழுப்பபட்டது. பின்பு பெரும் திரளாக தோழர்கள் ஒன்றுதிரண்டு ஊர்வலமாக நிகழ்வு நடைபெறும் அரங்கம் வரை சென்றனர். நிகழ்ச்சி ஏற்பாட்டை வேலூர் மாவட்ட கழகத் தோழர்கள் செய்தனர்.

# நெல்லைக் கண்ணன் கைதுக்கு வாழ்வுரிமை கூட்டமைப்பு கண்டனம்

பாஜகவின் அழுத்தத்தின் காரணமாக 01.01.2020 நெல்லை கண்ணன் கைது செய்யப்பட்டதை அடுத்து, தமிழக வாழ்வுரிமை கூட்டமைப்பு சார்பாக ஆலோசனைக் கூட்டமும் தொடர்ந்து பத்திரிக்கையாளர் சந்திப்பும் 02.01.2020 அன்று சென்னை நிருபர்கள் சங்கத்தில் நடைபெற்றது. எந்த உள்நோக்கமும் இல்லாமல் வட்டாரப் பேச்சு வழக்கில் நெல்லை கண்ணன் பேசியதற்கு, பாஜக தலைவர்கள் உள்நோக்கம் கற்பித்த தோடு அதனைப் பெரிதுபடுத்தி தமிழக அரசு அவரை கைது செய்யும் அளவிற்கு கொண்டு சென்றது மிகவும் கண்டனத்திற்கு உரியது என்றும், தமிழக அரசு அவரை உடனடியாக விடுவிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை, தொடர்ச்சியாக மதம், சாதி, மொழி, இனம் அடிப் படையில் மக்களிடையே பாகு பாட்டை உண்டாக்கி கலவரத்தை தூண்டுகிற விதத்தில் பேசி வரும் எச்.ராஜா போன்ற ஆர்.எஸ்.எஸ். - பாஜக தலைவர்களை பல்வேறு புகார்கள், வழக்குகளுக்கு பின்னரும் கைது செய்யாமல் இருப்பது உள் நோக்கம் கொண்டது. எனவே, நெல்லை கண்ணனை விடுவிப்பதோடு மட்டுமல்லாமல், கலவரத்தைத் தூண்டும் வகையில் வெறுப்பு பேச்சை பேசிவரும் ஆர்.எஸ்.எஸ்.-பாஜக தலைவர்களை கைது செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டது.

மேலும், சென்னை மெரினா கடற்கரையில் போராட்டம் செய்ய தடை என்று அரசு அறிவித்திருக்கும் நிலையில், நெல்லை கண்ணனை கைது செய்யக் கோரி மெரினா கடற்கரையில் பாஜகவினர் போராட்டம் நடத்தி யதில் மென்மையான போக்கை காவல்துறை கடைபிடித்துள்ளது. அப்படியென்றால் மெரினா கடற்கரை போராட்ட களத்திற்காக மீண்டும் திறந்துவிடப்பட்டுள்ளதா என்ற கேள்வியும் முன்வைக்கப்பட்டது. நெல்லை கண்ணனை விடுதலை செய்து பாஜக தலைவர்கள் மீதான கைது நடவடிக்கை மேற்கொள்ளா விட்டால், தமிழக வாழ்வுரிமை கூட்டமைப்பு சார்பாக மெரினா கடற்கரையில் போராட்டம் நடத்தப் படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

கூட்டமைப்பின் ஒருங்கிணைப் பாளர் தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், திராவிடர் விடுதலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் முனைவர் தொல்.திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன், மதிமுக துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா, SDPI கட்சியின் தேசியத் துணைத் தலைவர் தெஹ்லான் பாகவி மற்றும் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சென்னை மாவட்ட பொறுப்பாளர் குமரன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப வீரபாண்டியன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் தியாகு, இயக்குநர் கௌதமன், மே 17 திருமுருகன் காந்தி உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் பங்கேற்றனர்.

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

# அன்னூர் தோழர்கள் கழகத்தில் இணைந்தனர்



கோவை மாவட்டம் அன்னூர், நல்லி செட்டிப்பாளையத்தில் ஜன. 5, 2020 அன்று கழகத்தின் கோவை மாவட்டச் செயலாளர் வெள்ளிங்கிரி தலைமையில் திராவிடர் விடுதலைக் கழகக் கொடியை மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் ஏற்றி வைத்தார். பெயர்ப் பலகையை கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி திறந்து வைத்தார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன் மந்திரமா தந்திரமா செய்து விளக்கிக் காட்டினார். நல்லிசெட்டிபாளையம் மோகன் உறுதிமொழி வாசிக்க தோழர்கள் வழி மொழிந்தனர். அதனைத் தொடர்ந்து விஷ்ணு, மோகன் குமார், பார்த்திபன், மனோ ரஞ்சினி, தேவ பிரகாஷ், வெற்றிவேல், கோகுல், நந்தகுமார், தினேஷ் ஆகியோர் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்தனர்.

மற்றும் மாவட்ட மாநில தோழமைக் கழக பொறுப்பாளர்கள் தந்தை பெரியாரின் பணிகள் குறித்தும் சாமியார்களின் பித்தலாட்டங்கள் குறித்து விளக்கியும், இந்த அமைப்பு ஏன்? எதற்காக? என்றும் விளக்கமாக கருத்துரையாற்றினர்.

புதிய தோழர்களை உருவாக்குதல் முதல் அனைத்து நிகழ்ச்சிகளையும் களப்பணியாளர் விஷ்ணு மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். நிகழ்ச்சியில் விமலாதேவி-அன்பழகன் இணையர்களின் குழந்தைக்கு கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி அறிவுக்கனல் என்று பெயர் சூட்டினார். பார்த்திபன் நன்றி தெரிவித்தார். நிகழ்வில் கோவை, பொள்ளாச்சி, ஆனைமலை, திருப்பூர் பகுதி தோழர்கள் பொறுப்பாளர்கள் நல்லிசெட்டிபாளையம் பெரியார் நகர் பகுதி தோழர்கள், பொதுமக்கள் தோழமை அமைப்பினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th January 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN